# சிதம்பரம் நகராட்சி

**2023 ம் ஆண்டு பங்குனி திங்கள் – 27 ம் நாள் 10.04.2023 திங்கள்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம்**

**<u>மன்றக்கூட்டப் பொருள்</u>**

1) நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023 ம் மாத நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 304 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2) சிதம்பரம் நகராட்சி மீது சிதம்பரம் நகர கூட்டுறவு வங்கி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.**22401/2022**ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் சிதம்பரம் நகராட்சி சார்பாக திரு.சு.ரு.தினேஷ்ராஜ்குமார், அரசு கூடுதல் வழங்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிட்டதற்கு வழக்காடு கட்டணம் ரூ.**20,000/–** வழங்கிட கோரியுள்ளார். எனவே மேற்படி தொகையினை வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2) வழக்கின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.2806 / 2002 / அ2**

தீர்மானம் எண் 305 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3) சிதம்பரம் நகராட்சி ஆண்டு கணக்குகள் **Web Based Accounts** தயார் செய்து ஆண்டு கணக்கு **2021-2022** கணினியில் முடித்து **Trial Balance, Balance Sheet, Income and Expenditure Statement** ஆண்டு கணக்குகள் இதர இணைப்புகள் தயார் செய்து தணிக்கை அறிக்கைகள் **Xerox** எடுத்து Binding செய்து பெறப்பட்டது. ஆதவன் சொலிஷன் விழுப்புரம் நிறுவனம் மூலம் **2021-2022** ம் ஆண்டு கணக்குகள் அறிக்கை பெறப்பட்டது.மேற்படி பெறப்பட்ட கணக்குகள் அறிக்கைக்கு **2020-2021** ம் ஆண்டில் வழங்கப்பட்ட விலைவகிதத்திலேயே ரூ.39000/- ஆதவன் சொலிஷன் விழுப்புரம், நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4376/2020/பி2)**

தீர்மானம் எண் 306 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

4) சிதம்பரம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2022-23 முன்னிட்டு குடியிருப்பு பகுதிகளில் பல்வேறு இடங்களில் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துவிடும் அபாயம் உள்ளது. மேலும் அதிகமாக தேக்கமாகும் மழைநீரால் டெங்கு மற்றும் மலேரியா நோய் பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகின்றன. எனவே எதிர்வரும் வடகிழக்கு பருவமழைகளால் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்க்கும் பொருட்டு நகராட்சியின் அனைத்து பகுதியில் உள்ள கால்வாய்கள் மற்றும் வடிகால்களை தூர்வார நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆலோசனைப்படி இப்பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, ஓமகுளம் லால்புரம் **Inlet & Outlet** எடத்தெரு, மின்நகர், சிவசக்தி நகர், பொன்னம்பலம் நகர், சபாநயாகர் தெரு, காந்தி நகர், கனகசபை நகர், சந்தி நகர், பைபாஸ் ரோடு, நடராஜா கார்டன் நுழைவு பகுதி , உட்பகுதிகள் ஆகிய வாய்க்கால்களை தூர்வார வேண்டியுள்ளது. மேற்படி பணி வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு உடனடியாக மேற்கொள்ளவேண்டியுள்ளதால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

தீர்மானம் எண் 307 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

.

5) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழக சட்டப்பேரைவையில் 07.05.2022 அன்று விதி எண்.110-ன்கீழ் அரசு துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை சிற்றுண்டி வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட 9 துவக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி தயார் செய்வதற்கு ஒருங்கிணைந்த சமையல் கூடம் அமைத்திட சம்பந்தகார உயர்நிலைப்பள்ளியில் காலியாக உள்ள இடம்

தேர்வு செய்யப்பட்டு அதில் ஒருங்கிணைந்த சமையல் கூடம் அமைத்திட தேவையான சமையர்கூட வசதிகள் மேற்கொள்ள தயார்செய்யப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.28,00,000/-ஐ மாநில அரசின் நிதியை எதிர்நோக்கி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் அரசு நிதி வரப்பெற்றவுடன் இப்பணிக்கான செலவினத்தை ஈடுசெய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும்மன்றம்அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண் 308 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

6) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய **15.12.2022** அன்று **வருவாய் நிதி (Revenue Fund) 2022–23–ன்**கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி (Revenue Fund) 2022–23** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 31 BY 4367 (பழைய ஜெட்ராடு) வாகனத்தை தகுதி சான்று புதுப்பித்து பழுதுகள் அகற்றி சரிசெய்யும் பணி. | மெஸ்ஸர்ஸ் சரவணா ஆட்டோ மொபைல்ஸ், கடலூர். | 1,97,500/– | மதிப்பீட்டு விலையை விட 0.27 % குறைவு | |
| | | மெஸ்ஸர்ஸ் விநாயகா ஆட்டோ கேரேஜ், கடலூர். | | –– | மதிப்பீட்டு விலையை விட 1.05 %அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி 0.27%மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **மெஸ்ஸர்ஸ் சரவணா ஆட்டோ மொபைல்ஸ்,** கடலூர் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெஸ்ஸர்ஸ் சரவணா ஆட்டோ மொபைல்ஸ், கடலூர் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண் 309 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

7) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண் 7 மானா தெருவில் உள்ள நகராட்சி நடுநிலைப்பளி கழிவறைகளின் கதவுகள் மிகவும் பழுதடைந்தும், கைகழுவும் தொட்டி உடைந்து மாணவர்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளது. எனவே, கழிவறையில் உள்ள கதவுகள் மற்றும் கைகழுவும் பேஷின் தொட்டி புதியதாக அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 1,28,000/-க்கு ஆகும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 310 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**8)** சிதம்பரம் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் எண். TN 31 AW 1729 டிராக்டர் வாகனத்தில் உள்ள பேட்டரி மிகவும் பழுதடைந்து இயங்காமல் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் தொய்வு ஏற்படுகின்றது. எனவே மேற்படி வாகனத்திற்கு புதியதாக பேட்டரி வாங்குவதற்காக ஆகும் செலவினம் ரூ. 9000/-ஐ குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 311 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

9) சிதம்பரம் நகராட்சி வார்டு எண் 22 பேருந்து நிலைய அருகில் இயங்கிவந்த மணிகூண்டு பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. இதனை சரிசெய்யும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 90,000/-ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தில் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 312 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

10) சிதம்பரம் நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகளுக்கு மண்பரிசோதனை (Geo Technical Investigation) செய்ய M/s. ASHHIRWAAD ANALYTICAL LABORATORY, PUDUCHERRY என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு, அதன் அறிக்கை பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கான பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மண்பரிசோதனை செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ |
|---|---|---|
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பாரதிதாசன் தெருவில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டும் பணி. | 41500.00 |
| 2 | சிதம்பரம் நகராட்சி, லால்புரத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி. | 7500.00 |
| 3 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட ஆணைமதகு குளம் மற்றும் ஈஸ்வரன் குளம் | 15000.00 |
| 4 | அறிக்கை (Hard & Soft Copy ) கட்டணம் | 12000.00 |
| | GST 18 % | 13680.00 |
| | **கூடுதல்** | **89680.00** |

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 313 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

11) சிதம்பரம் நகராட்சி நிர்வாகத்தினை நவீனப்படுத்த நிர்வாக ரீதியாக கணினி மயமாக்க வேண்டியுள்ளது. எனவே கணினிகள் மற்றும் மடிக்கணினிகள் தேவைப்படுவதால் பட்டியலில் குறிப்பிட்டுள்ள கணினிகள், மடிக்கணினிகள், ஜெராக்ஸ் மெஷின்கள் மற்றும் பிரிண்டர்கள் அதற்கு தேவையான மற்ற கணினி உபகரணங்கள் தேவைப்படுவதால் அவசியத்தை கருத்திகொண்டு வாங்கி பயன்படுத்த உரிய அனுமதிக்கும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.18.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**Desktop Computers**

பொதுப்பிரிவு - 3 எண்கள்
பொறியியல் பிரிவு - 3 எண்கள்
நகரமைப்பு பிரிவு - 1 எண்ணிக்கை
பொதுசுகாதாரப்பிரிவு - 2 எண்கள்
வருவாய் பிரிவு - 2 எண்கள்

**Laptop**

பொறியியல் பிரிவு - 1 எண்ணிக்கை

**Printers all-in-one**

பொதுப்பிரிவு - 2 எண்கள்
பொறியியல் பிரிவு - 2 எண்கள்
நகரமைப்பு பிரிவு - 1 எண்ணிக்கை
பொதுசுகாதாரப்பிரிவு - 1 எண்கள்
வருவாய் பிரிவு - 1 எண்கள்

**Xerox Printer**

பொதுப் மற்றும் வருவாய் பிரிவு - 1 எண்ணிக்கை
பொறியியல் பிரிவு - 1 எண்ணிக்கை

**Canon LBP 6030B Laserjet Printer**

பொறியியல் பிரிவு - 1 எண்ணிக்கை

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 314 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

12) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 அனந்தீஸ்வரன்கோவில் தெருவில் உள்ள நகராட்சி பூங்கா பராமரிப்பின்றி மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள குழந்தைகள் இப்பூங்காவினை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட பூங்காவினை பராமரிப்பு செய்ய ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 2,10,000/-க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 315 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

13) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 12 மற்றும் 13 பாரதி தெரு மற்றும் திரௌபதி அம்மன் கோவில் தெருவில் உள்ள வடிகால் இல்லாத காரணத்தால் மழைநீர் தேங்குவதால் பொதுமக்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் சிறுபாலம் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 4.90 இலட்சத்திற்கும் செலவினத்தை மன்றத்தின் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 316 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

14) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 கச்சேரி தெருவில் இயங்கிவந்த மினிபவர் பம்பில் உள்ள போர்வெல் தற்போது பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளது. எனவே கோடைகாலத்தினை முன்னிட்டு அப்பகுதியில் பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் மேற்கண்ட இடத்தில் உள்ள மினிபவர் பம்பு பழுது நீக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 1.50 இலட்சத்திற்கும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 317 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

15) சிதம்பரம் நகராட்சிக்கு எதிராக, திரு.எம்.கல்யாணசுந்தரம் மற்றும் சிலர் சேர்ந்து பணி நிரந்தரம் செய்திடவேண்டி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கு எண். WP No. 15681/2022-ல் கடந்த 24.06.2022 அன்று வாதிகளுக்கு வரப்பெற்ற தீர்ப்பில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து மனுதாரர்கள் மேல்முறையீடு செய்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் WP No. 510 of 2023-ல் தொடர்ந்த வழக்கிற்கு திரு பி.கணேசன் அரசு கூடுதல் வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கு தொடர்பாக ஆஜராகி வாதிடுவதற்கு கட்டணம் வழங்க தனது 03.03.2023 தேதிய கடிதம் மூலம் ரூ.25000/- செலுத்த கோரியுள்ளார். எனவே, மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 318 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

16) சிதம்பரம் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN 31 AY 4344 குடிநீர் லாரியின் முன்பக்கம் மற்றும் பின்பக்க டயர்கள் அனைத்தும் பழுதடைந்து இயக்கமுடியாமல் உள்ளது. சிதம்பரம் நகர மக்களுக்கு தினந்தோறும் குடிநீர் லாரி மூலம் சென்று வழங்குவதில் தொய்வு ஏற்படுகின்றது. எனவே மேற்கண்ட வாகனத்திற்கு புதியதாக டயர்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் 1,10,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 319 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

17) சிதம்பரம் நகராட்சி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்டு மற்றும் ஓராண்டில் சிதம்பரம் நகராட்சியில் நடைபெற்று வரும் பணிகளை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022-23-ன் கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ் விபரம் | விளம்பர நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினமலர் | 01.03.2023 | 19844 |
| | | கூடுதல் | 19844 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். **668 /2023/இ1)**

தீர்மானம் எண் 320 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

18) சிதம்பரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உபயோகமற்ற தன்மையில் உள்ள 5 எண்ணிக்கை கனரக வாகனங்களை பொதுகழிவு மூலம் கழிவு செய்ய அந்தந்த நிலையிலேயே பொது ஏலம் மூலம் அகற்றிட கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022-23-ன் கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ் விபரம் | விளம்பர நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மாலை மலர் | 20.09.2022 | 10332 |
| | | கூடுதல் | 10332 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். **438 /2023/இ1)**

தீர்மானம் எண் 321 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

19) சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகங்களை இயக்குவதற்கு கங்கை மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் 9 ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் அமைத்து பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் ஒப்பந்தகாலம் 28.02.2023 உடன் முடிவடைவதால்,

பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்க்கப்பட்டு வரும் கங்கை மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியினை மேலும் இரண்டு மாதங்களுக்கு 1.03.2023 முதல் 30.04.2023 வரை பணி நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினத் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.3490/2022/எச்1

## தீர்மானம் எண் 322 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

20) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனங்கள் 16- இலகு ரக வாகனங்கள்- 7 ம் டிராக்டர் வாகனங்கள்- 4 ம் மற்றும் கையால் தள்ளும் வண்டியும் ரிக்ஷா வாகனங்களும் ஈடுபடுத்தப்படுகிறது. மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்க ஒவ்வொரு வாகனத்திற்கும் 4 கூடைகள் தேவைப்படுகிறது. ஏற்கனவே வாங்கப்பட்டவை 3 வருடங்களுக்கு மேல் ஆவதால் மிகவும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. SBM-2.0-ன் படி பணிகள் பார்ப்பதற்கு கீழ்க்கண்ட எண்ணிக்கையில் பிளாஸ்டிக் கூடைகள் வாங்குவதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.2,50,000/ ஆகும். மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

.

1.பிளாஸ்டிக் கூடைகள் - 80 கிலோ அளவு - 100 Nos
2.பிளாஸ்டிக் பேரல் - 200 லிட்டர் அளவு - 50 Nos

**அலுவலகக்குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 214/2023/எச்1

## தீர்மானம் எண் 323 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

21) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு சார்பாக சுகாதாரப் பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. சிதம்பரம் நகராட்சியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள நீர்த்த சுண்ணாம்பு, மற்றும் பிளீச்சிங் பவுடர், கீழ்கண்ட அளவுகளில் தேவைப்படுகிறது.

1.நீர்த்த சுண்ணாம்பு - 15 டன் (15,000 கிலோ)
2.பிளீச்சிங் பவுடர் - 10 டன் (10,000 கிலோ)
மேற்க்கண்ட அளவுகளில் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 3616/2022/எச்1

## தீர்மானம் எண் 324 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

22) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசு ஒழிப்பு பணிகளில் கங்கை மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் ஈடுபடுத்தப்பட்டுவரும் 50 DBC பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமைத்து பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களின் ஒப்பந்தகாலம் 28.02.2023 உடன் முடிவடைவதால், பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்க்கப்பட்டு வரும் கங்கை மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியினை மேலும் இரண்டு மாதங்களுக்கு 1.03.2023 முதல் 31.05.2023 வரை பணி நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2481/201/எச்1

## தீர்மானம் எண் 325 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

23) சிதம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு எண் **61/2, 63/3, 64/3, 66/4, 62/1, 62/2, 46/2, 46/1, 46/3, 48/1,** மற்றும் **48/3-ல் உள்ள 8 ஏக்கர் 13** சென்ட் பரப்பளவு கொண்ட நிலம் நகராட்சி சர்வே வார்டு எண்.2, பிளாக் -B,-ல் உள்ள நகராட்சி எல்லைக்குட்பட்ட (நடராஜா கார்டன் பின்புறம்) சொத்தினை ஆவண பதிவு எண்.**1333/1970** மூலம் பதிவு செய்துள்ள திரு பாசுதீன் (1), திருமதி முகம்மது ரபி (2), திரு சுல்தான் சிக்கந்தர் (3) மற்றும் திருமதி மேகராஜ் பேகம் (4), ஆகிய நால்வருக்கும் சொந்தமான சொத்து எனவும், அதனை சிதம்பரம் நகராட்சி ஆக்கிரமித்து உள்ளது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் **W.P.NO.31377/2016** எண்ணிட்ட வழக்கு தொடரப்பட்டுள்ளது, மேற்படி வழக்கில் பிரதிவாதியான நகராட்சி சார்பில் வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்திட திரு **A.M. அய்யாதுரை** அரசு வழக்கறிஞர், சென்னை, அவர்கள் வசம் ஒப்படைத்து வழக்கினை நடத்தவும் வழக்காடு கட்டணம் **ரூ,20000/-**பொது நிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது,

**அலுவலகக் குறிப்பு** 1) மன்றம் அனுமதிக்கலாம்,

2)வழக்கினை நடத்திடவும் மற்றும் வழக்காடு கட்டணம் **ரூ**,20000/- வழக்கிடவும் மன்றம் அங்கீகரிக்கலாம்,

(ந.க.எண். (**3597/2016/எப்1**)

தீர்மானம் எண் 326 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**24)** இந்திய திருநாட்டில் கட்டுப்பாடற்ற நகரமயமாக்கம் பெரும்பாலும் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்துகிறது. மற்றவர்கள் வெளியேற்றும் மலத்தை நிர்வாகிக்க ஒரு மனிதன் தன் உயிரையே பயன்படுத்தி கொள்ளுதல் மிகவும் வருந்தத்தக்க நிலை ஆகும். **1993**–ம் ஆண்டு முதல் **800**–க்கு மேற்பட்ட உயிரிழைப்புகள் பாதாள சாக்கடைகள் மற்றும் செப்டிக் டேங்குகளை பாதுகாப்பு கியர் இல்லாமல் சுத்தம் செய்த நிலை காரணமாக ஏற்பட்டது மிகவும் கவலைக்குரிய விஷயம் எனவும் சுற்று சூழலை தூய்மையாக வைத்திருப்பதற்கும், நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கு சுகாதாரப் பணியாளர்கள் பிரச்சனைகளுக்கு பல்வேறு நிலைகளில் உள்ள அனைத்து பங்குதாரர்களின் அவசர கவனம் தேவை கருதி மத்திய அரசாங்கம் ஸ்விட்சு பாரத் மிஷன் குழுமம் மூலம் கையாண்டு வெற்றியும் கண்டுள்ளன. மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் அடையாளம் காணப்பட்ட நகர்ப்புற நகராட்சிகளில் சபாய் மித்ரா சுரக்ஷித் என்ற அமைப்பின் கீழ் வருடாந்திர இடைப்பட்ட சவாலை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்ட மேலாண்மையில் முன்னேற்றம் மற்றும் சம்பந்தப்பட்ட செயல்முறைகளின் இயந்திரமயமாக்கலால், ஒரு சுகாதார பணியாளர் கழிவுநீர் தொட்டிக்குள் நுழைவதற்கான எந்தவொரு தேவையும் நீங்கி விடுவதோடு முழுபாதுகாப்பு கவசத்துடன் பணிகள் நடைபெற உள்ளதால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட வாய்ப்புள்ளன. இந்நாட்டின் கசடு கழிவு நீரகற்றல் பணி நிர்வகிப்பதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்று சூழல் பொறியியல் அமைப்பு (CPHEEO) வழிகாட்டு மற்றும் அளவீடு இருக்க வேண்டும் என சபாய் மித்ரா சுரக்ஷித் அமைப்பில் நெறிமுகைள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி நகர்ப்புற உள்ளாட்சியாக இருந்தால் கசடு கழிவு நீரகற்றல் மேலாண்மை பணியினை சபாய் மித்ரா சுராக்ஷித் என்ற அமைப்பின்படி அறிவித்து பின்வரும் களங்கள் மூலமாக பணிகள் நடைபெற வேண்டும்.

1. நிறுவன களம்
2. மனிதவள களம்
3. உபகரணங்கள் களம்.

**1. நிறுவன களம்**

- ஒரு பொறுப்பான துப்புரவு குழுமம் அமைக்கப்படவேண்டும்
- ஒரு அவசர சுகாதாரப் பதிலளிப்பு பிரிவு தனியாக அமைக்கப்பட வேண்டும்.
- அவசர நிலை, சேவைக்கான கோரிக்கை அல்லது சாக்கடைக்குள் சட்ட விரோதமாக நுழைவதை புகாரளிக்க குடியிருப்பாளர்களுக்கு ஒரு ஹெல்ப் லைன் தகவல் தொடர்பு வசதி செய்ய வேண்டும்.
- செப்டிக் டேங்குகள் மற்றும் செயல்பாடுகளை கண்காணிக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்
- புதிதாக அமைக்கப்படவேண்டிய அனைத்து கழிவுநீர் தொட்டிகள் IS2470 தரக்குறியீடு மற்றும் வகை வடிவமைப்புபடி அமைக்கப்படவேண்டும்.

**2. மனிதவள களம்**

- CPHEEO அளவீடு மூலம் மதிப்பீடப்பட்ட கழிவுநீர் பணியாளர்கள் மற்றும் சானிட்டரி பெல்டர்கள் உட்பட தேவையான மனித வளத்தில் குறைந்தபட்சம் 80 % இருக்க வேண்டும்.
- தனியார் துப்புரவு சேவை ஆப்ரேட்டர்கள் அல்லது வெளிமுகமை பணியாளர்களில் 7 % கழிவுநீர் நுழைவு வல்லுநர்களாக அவசர கால பணிக்காக இருக்க வேண்டும்.
- சுகாதார பணியாளர்கள் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
- போதுமான, திறமையான சாக்கடை திட்ட சுகாதார பணியாளர் மற்றும் சானிட்டரி பெல்டர்கள் உள்ளனர் எனவும், பயிற்சி பெற்ற வல்லுநர்கள் உள்ளடங்கியுள்ளது எனவும் சுய உறுதி மொழியினை நகராட்சி மூலம் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்திடம் சமர்பித்து 12 வாரங்களுக்குள் 100 % ஈடுபாடுள்ள மனிதவளத்தின் திறனை அடைவதை நோக்கமாக கொண்டு இயங்குகிறது சான்று பெறவேண்டும்.

**3. உபகரணங்கள் களம்**

CPHEEO அளவீடுப்படி மதிப்பிடப்பட்ட கீழ்காணும் முக்கிய உபகரணங்களில் குறைந்தபட்சம் 50 % நகர்ப்புற நகராட்சிகள் வைத்திருக்க வேண்டும்.

- நிலையான செப்டிக் டேங்க் வாகனங்கள்

- ஹைட்ரோ வாக் செட்
- கிராபர்ஸ் டிசில்டிங் இயந்திரங்கள்
- சிறப்பு உபகரணங்களாக கழிவுநீர் ஆய்வு கேமரா கருவி, ஹைட்ரோ ஜெட்டிங் மெஷின், பவர்கட் இயந்திரம், பவர் ராடிங் கருவி, டைட்ராலிக் கழிவுநீர் ரூட் கட்டர் இதில் ஒரு தொகுப்பையாவது வைத்திருக்க வேண்டும்.
- CPHEEO அளவீடுப்படி உள்ள பாதுகாப்பு கியர் உபகரணங்கள் இரு குழுக்களாக எதிர் கொள்வதற்காக வைத்திருக்க வேண்டும்.
- குழு பணியாளர்களின் பாதுகாப்புக்கு தேவையான நைலான் ரோப் ஏணி, புளோயர், கேஸ் மானிட்டர், கேப் மாஸ்க், பிரிதிங் உபகரணங்கள் வைத்திருக்க வேண்டும்.
- தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுக்காக ரிப்ளெட்டிங் ஜாக்கெட், பாதுகாப்பு தலை கவசம், முககவசம், கையுறை, பாதுகாப்பு காலனி மற்றும் பாதுகாப்பு உடலாடை சுகாதார பணியின்போது இருக்கவேண்டும்.

**4. செயல்முறைகள்**

- நிலை –1ல் நகர்ப்புற நகராட்சிகளில் நிறுவனம், மனிதவளம், உபகரணம் ஆகிய மூன்று களங்கள் உள்ளன என சம்பந்தப்பட்ட நகராட்சி சபாய் மித்ரா சுராக்ஷித் அமைப்பில் Swachhatam portal –ல் online –ல் சுய உறுதி மொழி சமர்ப்பித்து மூன்றாம் நபர் ஆய்வுக்குழு வழங்கிட மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்திடம் விண்ணப்பிக்க வேண்டியுள்ளன.
- நிலை II –ல் நகர்மன்ற வார்டு உறுப்பினர்கள் மற்றும் வட்டார பொறுப்பாளர்கள் செப்டிக் டேங்குகள் கட்டமைப்பு IS 2470–ன்படி உள்ளது எனவும் Building plan அனுமதி பெற்றுள்ளது என உறுதிமொழி அளிக்க வேண்டும்.
- குடியிருப்பு உரிமையாளர்களுக்கு இயந்திரமயமான முறையில் கழிவுநீர் எடுத்து செல்லுதல் மற்றும் செப்டிக் டேங்க் கிளினிங் பணிகள் நடைபெறுகிறது என விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- இயங்கக்கூடிய நிலையில் துரித தகவல் தொடர்பு வசதி உள்ளூர் குடியிருப்பு உரிமையாளர்கள் புகார் வழங்க உள்ளது என தெரிவிக்க வேண்டும்.
- நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி வார்டுகளின் உறுப்பினர்கள் அளிக்க கூடிய சுய உறுதியளிப்பினையும் Swachhatam portal–ல் நான்கு வாரத்திற்குள் Online–ல் இணைக்கப்பட வேண்டும்.
- நிலை III–ன்படி பொதுமக்களின் பிரதிகள் அளித்துள்ள சுய உறுதி மொழியினை சமர்ப்பிக்கப்பட்ட 12 வாரகாலத்திற்குள் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மூலம் நிர்ணயிக்கப்படும் மூன்றாம் நபர் குழு மூலம் ஆய்வு மற்றும் ஒத்திசைவு மேற்கொள்ளப்படவேண்டும்.
- மூன்றாம் நபர் குழு கள ஆய்வு முடிவுற்ற உடன் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மூலம் One-time சான்றளிப்பு பெற வேண்டும்.
- இந்த நடைமுறையில் தேர்ச்சியின்மை ஏற்பட்டால் வாய்ப்பளிக்கப்பட்ட நான்கு வார காலத்திற்குள் மறுகட்டமைப்பு ஏற்படுத்தி மீண்டும் மூன்றாம் நபர் குழு ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.
- மேற்கூறிய பல்வேறு நிலைகள் மற்றும் பணிகளை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் விதிமுறைகள்படி இந்நகராட்சியில் அமுல்படுத்திட மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண் 327 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

25) சிதம்பரம் நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் 2022-23-ன்கீழ் மதிப்பீடு ரூ.30.50 இலட்சத்தில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 17.03.2023-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கோரி பணி கிடைக்கப்பெற்ற ஒப்பந்தாரர் பெயர் |
|---|---|---|---|
| | நமக்கு நாமே 2022–23 | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி, கச்சேரி தெருவில் உள்ள புதிய நூலகத்திற்கு சுற்று சுவர் அமைக்கும் பணி. | 7.50 | திரு.எஸ்கிருஷ்ண மூர்த்தி |
| 2 | சிதம்பரம் நகராட்சி வடக்கு தேரோடும் வீதியில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் Smart Class அமைக்கும் பணி. | 12.00 | மெஸ்ஸர்ஸ் குளோபல் அசோசியட்ஸ், நெல்லிக்குப்பம் |
| 3 | சிதம்பரம் நகராட்சி, காந்தி பூங்காவினை மேம்படுத்தும் பணி | 11.00 | திருமதி. கே.முத்துலட்சுமி |

| | கூடுதல் | 30.50 | |
|---|---|---|---|

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 328 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

26) சிதம்பரம் நகராட்சி சி.தண்டேஸ்வரநல்லூர் உரக்கிடங்கில் மீதமுள்ள 29791.08 கனமீட்டர் மரபுகழிவுகளை (Legacy Waste) அகற்றும் பணிக்கு கனஅளவை துல்லியமாக அளவீடு செய்யும் (Quantification, Periodic site visit, Monitoring Project Progress Based on Technical Data, Certification of Work & Guidance on technical aspect) பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களால் Center for Environmental Studies அண்ணாபல்கலைகழகத்தை ஆலோசகராக நியமித்துக்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டதற்கிணங்க, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆலோசனைக்கட்டணமாக (Consultant Fees) ரூ.4,72,000/- (சரக்கு மற்றும் சேவைவரி 18 % உட்பட) தொகையினை வழங்க கோரி அண்ணாபல்கலைகழகம், சென்னை அவர்களிடமிருந்து கடித எண். 1257/CES/KJ/Chidambaram/2022-23, நாள் 21.02.2023-ல் பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தொகை ரூ.472000/- நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 329 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

27) சிதம்பரம் நகராட்சி உள்ளாட்சி சாதாரண தேர்தல் 2022க்கான மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கர்நாடக மாநிலத்திலிருந்து ஒதுக்கீடு செய்து வரபெற்றது.கர்நாடகா மாநிலத்தில் இருந்து சரிபார்த்து எடுத்து வரபெற்ற மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் விருத்தாசலம் அரசு சேமிப்பு கிடங்கில் கன்டெய்னரைஸ் செய்யப்பட்ட வாகனம் மூலம் பாதுகாப்பாக எடுத்து வந்தமைக்கு வாடகை கட்டணமாக சிதம்பரம் நகராட்சி ரு.**34206**/- செலுத்த கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் பஇ2/6343/2019 நாள் 25.03.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாடகை தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3088/2021/சி1

தீர்மானம் எண் 330 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**28)** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தாம்பரம் அவர்களின் தொலைபேசி செய்தியில் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட **10** நகராட்சி பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவர்கள் வாசிப்பு திறனை அதிகரிக்கவும் , பொது அறிவுத்திறனை மேம்படுத்தவும் மற்றும் உலக நடப்புகளை அறிந்துகொள்ளும் வகையில் தினந்தோறும் தினசரி நாளிதழ் **(**தினகரன்**) 2022–23 –**ம் ஆண்டு சிறப்பு சந்தா திட்டத்தின்கீழ் தினந்தோறும் இரண்டு பிரதிகள் (per day 2 copies, per paper Rs.**4/–)** ரூ.**16,000/– (200** பள்ளி வேலை நாட்களுக்கு மட்டும்**)** வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது**.**

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்**.**
**2)** பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியதையும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்**.**
**3)** மேலும் இச்செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்**.**

தீர்மானம் எண் 331 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**29) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் 4 நுண் உரம் தயாரிக்கும் மையங்களில் (MCC) இருந்த எடை பார்க்கும் கருவிகள் பழுதடைந்து பயனற்ற வகையில் உள்ளது. இதனால் மக்கும் குப்பைகளின் அளவுகளை அளவீடு செய்ய முடியாமல் உள்ளது. இதனால் அவ்வப்போது நகராட்சி மண்டல இணை இயக்குநர் அவர்கள் ஆய்வின்போது இவற்றை சரிசெய்ய அறிவுறுத்தியதாலும், புதியதாக 3 எடை மிஷின்கள் வாங்கி வழங்கிட ஆகும் தோராய மதிப்பீடு ரூ.2,80,000/-யை மன்றத்தின் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்**

தீர்மானம் எண் 332 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

30) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட தெற்குவாணிய தெருவில் உள்ள சிறுபாலம் மிகவும் சேதமடைந்து உடைந்து, மழைநீர் தெருவில் தேங்கி நின்று பொதுமக்களுக்கு நோய்தொற்று அபாயம் ஏற்படுகிறது. இதனை சீர்செய்யவும் மேலும் கனகசபை நகரில் புதியதாக அமைக்கப்பட்ட மழைநீர் வடிகாலில் விடுபட்ட 6.00 மீட்டர் நீளத்திற்கு பழைய மழைநீர் வடிகாலிருந்து புதிய மழைநீர் வடிகாலினை

இணைக்கவும் மற்றும் மண்வெட்டி பக்கிரிசாமி தெருவில் சாலையின் கீழ்உள்ள மேன்ஹால்கள் சாலைமட்டத்திற்கு உயர்த்திடவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 2.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 333 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**31)** இந்நகராட்சிக்குட்பட்ட வக்காரமாரி தலைமை நீரேற்று நிலையம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், பேருந்து நிலையம், மீன்மார்கெட் மற்றும் இதர இடங்களில் இயங்கிவரும் குடிநீர் மின்மோட்டார்கள் பழுது அகற்றி பராமரிப்பு மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**10,00,000/–** க்கும் அதற்கான செலவினத் தொகையினை நகராட்சியின் குடிநீர் விநியோக நிதி **2023–24–**ன்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 334 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

32) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய **31.03.2023** அன்று **கல்வி நிதி (Education Fund) 2022–23ன்**கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இணையதளம் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **கல்வி நிதி (Education Fund) 2022–23** | | | | |
| **1** | சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 23, மாலைக்கட்டி தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளினை பராமரிப்பு செய்யும் பணி. | திருமதி. கே.முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர், பணங்காடு | 15,00,000/– | மதிப்பீட்டு விலையை விட (–) 0.07 % குறைவு | |
| | | திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டு விலையை விட (+) 0.92 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.**5–**ல் கண்டுள்ளபடி **0.07%** மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி. கே.முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர், பணங்காடு என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 335 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**33)** சிதம்பரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட செயலாக்க பணிகளை வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் பணியாளர்கள் மற்றும் வாகனங்களை அமர்த்தி பணி மேற்கொள்வதற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒரு வருடத்திற்கு ரூ.**456.06** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி வருவாய் **15–**வது மத்திய நிதிக்குழு நிதியில் செலவினம் மேற்கொள்ள MAWS (NS) Department G.O (ms) No.116, Date : **24.08.2023–**ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு **24.03.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. முறையே,

1) திருமதி.கே.முத்துலட்சுமி
கூட்டமைப்பு (Consortium) – தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார்.

2) திரு.எஸ்.கிருஷ்ணமுரத்தி – தொழில்நுட்ப தகுதி பெறவில்லை

இதில் தொழில்நுட்ப தகுதியை பூர்த்தி செய்துள்ள திருமதி கே.முத்துலட்சுமி அவர்களின் விலை உறையினை பிரித்து ஒப்புநோக்கு பட்டியல் தயார்செய்யப்பட்டதில், கீழ்காணும் தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | மதிப்பீட்டு விலை (மெட்ரிக் டன்) | ஒப்பந்த சத வீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM)** | | | | |
| | **திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM)** சிதம்பரம் நகராட்சியில் திடக்கழிவு | திருமதி.கே.முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர், பணங்காடு, | **4540.96** | மதிப்பீட்டுவிலையைவிட (–) 0.24% குறைவு | –– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேலாண்மை திட்ட செயலாக்க பணிகளை வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் அமைத்து பணி மேற்கொள்ளுதல் | சிதம்பரம். | | | |

தகுதிபெற்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி(–) 0.24% மதிப்பீட்டுவிலையை விட குறைவாக கொடுத்துள்ள திருமதி.கே.முத்துலட்சுமி , ஒப்பந்ததாரர், பணங்காடு என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.882/2022/எச்.1**

தீர்மானம் எண் 336 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

34) சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25, அங்காளம்மன் கோவில் தெருவில் குடிநீர் பற்றாக்குறையினை தவிர்க்கும் பொருட்டும் கோடைகாலத்தில் பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திடவும் அப்பகுதியில் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையினை ஏற்று நகர்மன்றத்தலைவரின் அறிவுரையின்படி இப்பகுதியில் புதியதாக மினி பவர் பம்பு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** - மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 337 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

35) **சிதம்பரம் நகராட்சி வார்டு எண். 21 கொத்தங்குடி பூக்காரத்தெரு சந்து மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு சிரமமாக உள்ளது. மேற்படி சாலையினை சீரமைக்க கோரி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினரிடமிருந்து தொடர்ந்து வந்த கோரிக்கையினை ஏற்று மேற்படி சாலையினை சீரமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 338 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

36) **சிதம்பரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அமைக்க ரூ. 15.00 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்காக பேருந்து நிலையம் அமையவிடத்தின் மண்ணின் தன்மை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு** - 1) **மன்றம் அனுமதிக்கலாம்**

2) **பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.**

தீர்மானம் எண் 339 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**37)** இந்நகராட்சிக்குட்பட்ட **33** வார்டுகளில் **57** எண்ணிக்கையில் மினி பவர் பம்புகள் இயங்கி வருகிறது. இதில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை அகற்றவும் மோட்டார் காயில் கட்டவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**9,75,000/–**க்கும் அதற்கான செலவினத் தொகையினை நகராட்சியின் குடிநீர் விநியோக நிதி **2023–24–**ன்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 340 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

38) சிதம்பரம் நகராட்சியில் தற்பொழுதுள்ள பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு சுமார் 40ஆண்டுகள் கடந்தவிட்டமையாலும், பேருந்து நிலையம் அமைந்துள்ள இடத்திற்கு பேருந்துகள் அதிக அளவில் சென்றுவருவதாலும் நகராட்சியின் புகழ்பெற்ற சிதம்பரம் நடராஜர் கோயில் தரிசனத்திற்காக வரும் தனியார் வாகனங்களினால் நகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பெருகிவரும் போக்குவரத்து நெரிசல் மற்றும் நகராட்சி விரிவாக்கம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு புதிய பேருந்து நிலையம் சிதம்பரம் நகராட்சிக்கு அமைக்கப்படும் என மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் 2022-23 ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் அரசாணை எண். 28, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA.&W)S), நாள் 22.02.2023யில் சிதம்பரம் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு நகர் பகுதியில் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் கடலூர் மாவட்டம், லால்புரம் கிராமத்தில் நகராட்சிக்கு சொந்தமான புல எண். 201 மற்றும் 202 சுமார் 8.11 ஏக்கர் (ஹெ 3.1950.0) பரப்பளவு உள்ள இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைய உள்ள இடத்திற்கும் புதியதாக

அமைக்கப்பட்டுள்ள NH-45A புறவழிச்சாலைக்கும் இடையே தனியாருக்கு சொந்தமான இடத்தில் அணுகு மற்றும் சேவை சாலை அமைக்கப்படவேண்டியுள்ளது.

மேற்கண்ட புதிய பேருந்து நிலையத்திற்கு அணுகு மற்றும் சேவை சாலை (Approach & Service Road) அமைப்பதற்கு பாலூத்தாங்கரை கிராமத்தில் தனியாருக்கு சொந்தமான புல எண்கள் 16/1B3, 16/2, 16/7, 17/3B1A, 17/3B2A, 17/4B1, 17/5B1, 44/4A, 45/2A, 45/6C மற்றும் 50/1A-ல் ஹெ.1.36710.0 (3.38 ஏக்கர்) பரப்பளவு இடத்தை நில எடுப்பு சட்டத்தின்கீழ் அல்லது தனியாரிடம் நேரடி பேச்சுவார்த்தை மூலம் பெற்றுத் தரும்படி மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களுக்கு முகவரியிட்ட இவ்வலுவலக கடித ந.க.எண். 1055/2023/எப்.1, நாள் 01.03.2023-ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்ளை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நிலத்தினை கிரயம் செய்திட நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களுக்கும் கடிதம் 01.03.2023 அன்று அனுப்பப்பட்டது.

புதிய பேருந்து நிலையத்திற்கு அணுகு சாலை மற்றும் சேவை சாலை அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர ஏதுவாக தனியாருக்கு சொந்தமான இடத்தை நேரடி பேச்சுவார்த்தை மூலம் கிரயம் செய்திட அல்லது நில எடுப்பு சட்டத்தின்கீழ் கையகப்படுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,00,000/-க்கும் அரசால் முழு மான்யமாக வழங்கிடவோ அல்லது, நகராட்சி பொது நிதியிலிருந்து கிரயம் செய்திடவோ நிர்வாக அனுமதி பெற அவசர அவசியம் கருதி முன்னேற்பு அனுமதி வழங்கியதை மன்றத்தின் அனுமதித்து தீர்மானிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** 1) பெருகிவரும் போக்குவரத்து நெரிசல் மற்றும் நகராட்சி விரிவாக்கம் ஆகியவற்றினை கருத்தில்கொண்டு புதிய பேருந்து நிலையத்திற்கு அணுகு சாலை மற்றும் சேவை சாலை அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர ஏதுவாக தனியாருக்கு சொந்தமான புல எண்கள் 16/1B3, 16/2, 16/7, 17/3B1A, 17/3B2A, 17/4B1, 17/5B1, 44/4A, 45/2A, 45/6C மற்றும் 50/1A-ல் ஹெ.1.36710.0 (3.38 ஏக்கர்) பரப்பளவு இடத்தை நேரடி பேச்சுவார்த்தை மூலம் கிரயம் செய்திட அல்லது நில எடுப்பு சட்டத்தின்கீழ் கையகப்படுத்திட, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் நிர்வாக ஒப்புதல் வழங்க மன்ற முன் அனுமதி பெற்று கருத்துரு அனுப்பியதனை மன்றம் அனுமதிக்கலாம்.

3) உத்தேச பேருந்து நிலைய இடத்திற்கும் NH-45A புறவழிச்சாலைக்கும் இடையே தனியாருக்கு சொந்தமான இடத்தினை நில ஆர்ஜிதம் அரசு அனுமதியுடன் கிரயம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,00,000/-க்கு மன்றம் முன் அனுமதி வழங்கியதை பதிவு செய்து மன்றம் அனுமதி வழங்கி தீர்மானிக்கலாம்.

தீர்மானம் எண் 341 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**39)** சிதம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ ரத வீதி கதவு எண்.**105** வார்டு எண்.**4**, பிளாக்–**3**, நகரளவு எண்.**284 2300** சதுரடி பரப்பளவில் அனுமதிக்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தைவிட்டு காலி செய்யவும் தவறும் பட்சத்தில் பூட்டிசீல் வைக்கப்படும் என தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **218, 318,338,339, 340** மற்றும் **344**–ன்கீழ் பிறப்பிக்கப்படும் அறிவிப்பு மற்றும் நகர்–ஊரமைப்பு சட்டம்–**1971** பிரிவு **56, 57**–ன்கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவில் **25.01.2023**–ம் தேதியிட்ட அறிவிப்பினை எதிர்த்து. சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.**3672/2023** மற்றும் W.M.P.No.**3757/2023** எண்ணிடப்பட்ட வழக்கு தொடரப்பட்டுள்ளது மேற்படி வழக்கில் **2**–ம் பிரதிவாதியான நகராட்சி சார்பில் வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்திட **திரு.E. விஜய் ஆனந்த்** வழக்கறிஞர்,சென்னை.அவர்கள் வசம் ஒப்படைத்து வழக்கினை நடத்திடவும்ம் வழக்காடு கட்டணத்தை நகராட்சி **2022–23** பொது நிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** **1)** மன்றம் தீர்மானிக்கலாம்.
**2)** வழக்கினை நடத்திடவும் மற்றும் வழக்காடு கட்டணம் வழங்கிடவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.3037/2022/எப்1)**

தீர்மானம் எண் 342 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**40)** சிதம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மாலைக்கட்டி தெரு கதவு எண்.**17/8**–ல் ஸ்டீல் கம்பெனி நடத்திவரும் கட்டிடம் குறித்து தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **218, 318,338,339, 340** மற்றும் **344**–ன்கீழ் பிறப்பிக்கப்படும் அறிவிப்பு மற்றும் நகர்–ஊரமைப்பு சட்டம்–**1971** பிரிவு **56, 57**–ன்கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவில் பழதடைந்த கட்டிடத்தினைவிட்டு காலிசெய்யவும் தவறும் பட்சத்தில் பூட்டி சீல் வைக்கப்படும் என்ற **01.02.2023**–ம் தேதியிட்ட அறிவிப்பினை எதிர்த்து. சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.**4065/2023** எண்ணிடப்பட்ட வழக்கு தொடரப்பட்டுள்ளது மேற்படி வழக்கில் **1**–ம் பிரதிவாதியான நகராட்சி சார்பில் வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்திட **திரு.P.சீனுவாஸ்.** வழக்கறிஞர்,சென்னை.அவர்கள் வசம் ஒப்படைத்து வழக்கினை நடத்திடவும்ம் வழக்காடு கட்டணத்தை நகராட்சி **2022–23** பொது நிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** வழக்கினை நடத்திடவும் மற்றும் வழக்காடு கட்டணம் வழங்கிடவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.3037/2022/எப்1)**

தீர்மானம் எண் 343 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

41) சிதம்பரம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் **54** கி.மீ குடிநீர் பகிர்மான குழாய் மூலமாக செயல்பட்டு வருகிறது. மேலும் வக்காரமாரி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து **6** கி.மீ நீளத்திற்கு பிரதான நீரேற்றும் குழாய் மூலம் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு ஏற்றப்பட்டு வருகிறது. இந்த பிரதான நீரேற்றும் குழாய் மற்றும் குடிநீர் பகிர்மான குழாயில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் பாதாள

சாக்கடை திட்டத்தின் மூலம் சில இடங்களில் கழிவுநீர் கலந்து வருவதால் இதனை சரிசெய்யவும் பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,75,000/—க்கும் செலவை நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 344 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**42)** சிதம்பரம் நகர மக்களின் குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் கொள்ளிடம் ஆற்றினை நீராதரமாக கொண்டு கொள்ளிடம் கூட்டுகுடிநீர் திட்டத்தை செயல்படுத்த ரூ.**255.64** கோடி ஒதுக்கி அரசாணை வெளியிட்டதற்கு கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி **2022—23—**ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ் விபரம் | விளம்பர நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினகரன் | 09.01.2023 | 40000 |
| | | **கூடுதல்** | 40000 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 088 /2023/இ1)

தீர்மானம் எண் 345 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

43)சிதம்பரம் நகராட்சி சிறப்பு நிதி மற்றும் ஓராண்டில் நடைபெற்ற பணிகளின் சாதனையினை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022—23—ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நாளிதழ் விபரம்** | **விளம்பர நாள்** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | தினகரன் | 01.03.2023 | 40000 |
| | | **கூடுதல்** | 40000 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 346 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**இடம் சிதம்பரம்**
நாள் : **06.04.2023**

**நகர்மன்றத் தலைவர்,**
**சிதம்பரம்.**